www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

11 ஆம் வகுப்பு ஒரு மதிப்பெண்

இயல் 1 - 8

1. **கடற்கோளால் அழிந்த கபாடபுரத்திலிருந்து தமிழ்வளர்த்த சங்கம் -------.**
   அ) கடைச்சங்கம் ஆ) இடைச்சங்கம்
   இ) முதற்சங்கம் ஈ) நான்காம் சங்கம் **[விடை: ஆ) இடைச்சங்கம்]**

2. **யுகத்தின் பாடல் என்ற வில்வரத்தினத்தின் கவிதையில் அமைந்துள்ள வாழ்த்துகள் -------.**
   அ) நாட்டு வாழ்த்தும் இறை வாழ்த்தும்
   ஆ) மொழி வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும்
   இ) இறை வாழ்த்தும் மொழி வாழ்த்தும்
   ஈ) அரச வாழ்த்தும் மொழி வாழ்த்தும் **[விடை: ஆ) மொழிவாழ்த்தும் நாட்டு வாழ்த்தும்]**

3. **நன்னூல் பாயிரப் பகுதியில் உள்ளவற்றுள் தற்கால நூலாசிரியர்கள் பயன்படுத்துவது -------**
   அ) அணிந்துரை ஆ) தந்துரை
   இ) புறவுரை ஈ) பதிகம் **[விடை: அ) அணிந்துரை]**

4. **ஆறாம் திணை என்னும் பாடப்பகுதியில் அ.முத்துலிங்கம் அவர்களால் சொல்லப்படும் நிலப்பகுதி -------**
   அ) மலை மலை சார்ந்த நிலமும் ஆ) காடும் காடு சார்ந்த நிலமும்
   இ) பனி பனி சார்ந்த நிலமும் ஈ) வயலும் வயல் சார்ந்த நிலமும்
   [விடை: இ) பனி பனி சார்ந்த நிலமும்]

5. **உங்கு, உப்பக்கம் ஆகிய சொற்கள் வெளிப்படுத்தும் பொருள் -------**
   அ) மேலே ஆ) இடையில்
   இ) அண்மை ஈ) சேய்மை **[விடை: ஆ) இடையில்]**

6. **கீழ்க்காணும் நாடுகளில் எந்நாட்டில் தமிழும் ஓர் ஆட்சிமொழியாக உள்ளது?**
   அ) தென்னாப்பிரிக்கா ஆ) மியான்மர்
   இ) மலேசியா ஈ) கனடா **[விடை: இ) மலேசியா]**

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

7. 'புல்லின் இதழ்கள்' என்னும் நூல் எக்கவிதை வடிவம் சார்ந்தது?
அ) மரபுக்கவிதை ஆ) ஹைக்கூ
இ) லிமரைக்கூ ஈ) புதுக்கவிதை [விடை: ஈ) புதுக்கவிதை]

8. தமிழ் இலக்கணக் கருத்துக்கு முரணானது -------
அ) வல்லின மெய்கள் மொழி இறுதியில் வருவதில்லை
ஆ) மெய்யெழுத்துகள் மொழி முதலில் வருவதில்லை
இ) ஆய்த எழுத்து மொழி முதலில் வருவதில்லை
ஈ) உயிரெழுத்துகள் பன்னிரண்டு மொழி இறுதியில் வருவதில்லை
[விடை: ஈ) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழி இறுதியில் வருவதில்லை]

9. நன்னூல் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட -------
அ) மொழிபெயர்ப்பு நூல் ஆ) வழி நூல்
இ) முதல் நூல் ஈ) சார்பு நூல் [விடை: ஆ) வழிநூல்]

10. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ------- பாடுவதில் வல்லவர்.
அ) மாலை ஆ) தலபுராணம்
இ) கோவை ஈ) பிள்ளைத்தமிழ் [விடை: ஆ) தலபுராணம்]

11. இயற்கை வேளாண் விஞ்ஞானி என அழைக்கப்படுபவர் -------
அ) மசான ஃபுகோகா ஆ) வி. கிருஷ்ணமூர்த்தி
இ) நம்மாழ்வார் ஈ) எம்.எஸ். சாமிநாதன் [விடை: இ) நம்மாழ்வார்]

12. உழுதவர் என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு -------
அ) வினைச்சொல் ஆ) பெயர்ச்சொல்
இ) தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
[விடை: ஈ) வினையாலணையும் பெயர்]

13. இன எழுத்து இல்லாத இணையைக் கண்டறிக.
அ) டற ஆ) கங
இ) சஞ ஈ) அஆ [விடை: அ) மற]

14. 'கேள்' என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்ச வடிவம் -------
அ) கேளாத ஆ) கேட்டவன்
இ) கேட்டு ஈ) கேட்ட [விடை: ஈ) கேட்ட]

15. பள்ளு நூல்கள் எந்தத் திணை மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை?
அ) முல்லை ஆ) குறிஞ்சி
இ) நெய்தல் ஈ) மருதம் [விடை: ஈ) மருதம்]

16. யானைகள் இடப்பெயர்வின் போது அவற்றுக்கு அச்சுறுத்தலாக இருப்பது -------
அ) விலங்குகள் ஆ) மதுகுப்பிகள்
இ) நெகிழிப் பைகள் ஈ) காடுகள் [விடை: ஆ) மதுகுப்பிகள்]

17. வேறுபட்ட சொல்லைக் கண்டறிக.
அ) வேழம் ஆ) களிறு
இ) மந்தி ஈ) கரி [விடை: இ) மந்தி]

18. யானைகளோடு தொடர்பில்லாத தொடர் -------
அ) குடும்பமாக வாழும் தன்மை உடையவை ஆ) அதிக நினைவாற்றல் கொண்டவை
இ) உலகிலேயே அதிக எடை கொண்ட விலங்குகள் ஈ) அதிக நாள் தரைவாழ் விலங்கு
[விடை: இ) உலகிலேயே அதிக எடை கொண்ட விலங்குகள்]

19. நிலத்தின் இயல்புக்குக் கேடு தரும் உரம் -------
அ) பசுந்தாள் உரம் ஆ) யூரியா
இ) மாட்டுச்சாணம் ஈ) பஞ்சகவ்யம் [விடை: ஆ) யூரியா]

20. ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் என்பது எந்த நூல் வகை -------
அ) இசைத்தமிழ் ஆ) அகம்
இ) அறம் ஈ) இலக்கணம் [விடை: அ) இசைத்தமிழ்]

21. வாழை + பழம் = வாழைப்பழம் இதில் வந்துள்ள புணர்ச்சி -------
அ) கெடுதல் ஆ) இயல்பு
இ) திரிதல் ஈ) தோன்றல் [விடை: ஈ) தோன்றல்]

22. Orology என்னும் சொல் குறிப்பது -------
அ) தாவரப் பெயர்கள் குறித்த ஆய்வு
ஆ) நீர்நிலைப் பெயர்கள் குறித்த ஆய்வு
இ) மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வு
ஈ) ஊர்ப் பெயர்களை குறித்த ஆய்வு
[விடை: இ) மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வு]

23. வாடிவாசல் ஏறுதழுவுதலில் வெற்றி பெற்ற வீரன் -------
அ) ஜமீன்தார் ஆ) மருதன்
இ) உசிலனூல் அம்பி ஈ) பிச்சி [விடை: ஈ) பிச்சி]

24. ஏடுகளிலிருந்த புறநானூற்றை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் -------
அ) சி.வை. தாமோதானார் ஆ) ந.மு வேங்கடசாமி
இ) ஆறுமுகனார் ஈ) உ.வே. சாமிநாதர் [விடை: ஈ) உ.வே. சாமிநாதர்]

25. திணை, பால், எண், இடங்களை வெளிப்படுத்தும் உறுப்பு -------
அ) இடைநிலை ஆ) சந்தி
இ) பகுதி ஈ) விகுதி [விடை: ஈ) விகுதி]

26. அண்ணாமலையாரின் காவடிச்சிந்தில் போற்றப்படும் கோவில் -------
அ) திருச்செந்தூர் முருகன் கோவில்
ஆ) திருமலை முருகன் கோவில்
இ) கழுகுமலை முருகன் கோவில்
ஈ) திருப்பரங்குன்றம் முருகன் கோவில் [விடை: இ) கழுகுமலை முருகன் கோவில்]

27. விளிம்பு, கரை, எல்லை, நுனி, போன்ற பல பொருள்களில் பயன்படுத்தப்படும் சொல் -------
அ) அடி ஆ) வரை
இ) மலை ஈ) கோடு [விடை: ஆ) வரை]

28. பல் + பொடி = பற்பொடி இதில் அமைந்துள்ள புணர்ச்சி -------
அ) உயிரீறு ஆ) இயல்பு
இ) தோன்றல் ஈ) விகாரம் [விடை: ஈ) விகாரம்]

29. சி.சு. செல்லப்பாவின் சுதந்திரதாகம் புதினத்திற்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்த ஆண்டு -------
அ) 2020 ஆ) 2004
இ) 2001 ஈ) 2002 [விடை: இ) 2001]

30. பின்வருவனவற்றுள் இறைச்சிப் பொருளில் அமைந்துள்ள பாடலடி -------
அ) எண்ண வலை பின்னும் மூளைச் சிலந்தி
ஆ) நீர்த்துறை படியும் பெருங்களிறு போல

இ) குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
ஈ) பிடிபசிகளை இய பெருங்கை வேழம் **[விடை: ஈ) பிடிபசிகளை இய பெருங்கை வேழம்]**

31. குறிப்பு பொருளில் வருவன -------
அ) இறைச்சி, உருவகம் ஆ) உள்ளுறை உவமம், இறைச்சி
இ) உவமை, இறைச்சி ஈ) உள்ளுறை உவமம், இறைச்சி
[விடை: ஆ) உள்ளுறை உவமம், இறைச்சி]

32. மரபுவழிக் கல்வியில் உயர்நிலைக் கல்விமுறை என்பது -------
அ) திண்ணைப் பள்ளிக் கல்வி முறை
ஆ) ஆசிரியரின் விருப்பப்படி கல்வி கற்கும் முறை
இ) தனிநிலையில் புலவர்களிடத்துக் கல்வி கற்கும் முறை
ஈ) கூட்டாகச் சேர்ந்து கற்கும் முறை
[விடை: இ) தனிநிலையில் புலவர்களிடத்துக் கல்வி கற்கும் முறை]

33. உவமையின் செறிவார்ந்த வடிவம் -------
அ) உருவகம் ஆ) இறைச்சி
இ) பயனுவமை ஈ) உள்ளுறை உவமை **[விடை: அ) உருவகம்]**

34. தலைவியின் இல்லறப் பண்பை வெளிக்காட்டும் பாடல் அடி -------
அ) வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
ஆ) தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்
இ) ஈத்துக்கை தண்டாக் கைகூடும் துப்பின்
ஈ) அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொள்
[விடை: ஈ) அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொள்]

35. பின்வருவனவற்றுள் 'கற்றல்' செயலை அடிப்படையாகக் கொண்டது -------
அ) பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
ஆ) தீதும் நன்றும் பிறர்தர வாரா
இ) யாதும் ஊரே யாவரும் கேளிர்
ஈ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
[விடை: ஈ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்]

36. சான்றோர் அவை என்பது -------
அ) கல்வி கற்கும் தளமாய் விளங்கியது
ஆ) செயல்களை சீர்தூக்கிப் பார்க்குமிடமாய் விளங்கியது
இ) கவிதைத்தளமாய் விளங்கியது
ஈ) கலைகளைச் செதுக்கும் தளமாய் விளங்கியது
[விடை: ஆ) செயல்களை சீர்தூக்கிப் பார்க்குமிடமாய் விளங்கியது]

37. கொடுத்த, தந்தை கொழுஞ்சோறு உள்ளர். இத்தொடரில் 'கொடுத்த' என்னும் சொல்லிற்குரிய இலக்கணக்குறிப்பு -------
அ) வினையெச்சம்
ஆ) பெயரெச்சம்
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஈ) எதிர்மறைப் பெயரெச்சம் **[விடை: ஆ) பெயரெச்சம்]**

38. விடுத்தல் என்பதற்கான பகுபத உறுப்பிலக்கணம் -------
அ) விடு + தல் ஆ) விடு + த் + அல்
இ) விடு + த் + தல் ஈ) விடு + த் + த் + அல் **[விடை: இ) விடு + த் + தல்]**

39. பிள்ளைக்கூடம் கவிதை எடுத்தாளப்பட்ட நூல் -------
அ) சுடுபூக்கள் ஆ) கொடி விளக்கு
இ) நெருஞ்சி ஈ) மறுபயணம் [விடை: ஆ) கொடி விளக்கு]

40. சீறாப்புராணக் காண்டங்களிலுள்ள உட்பிரிவுகள் -------
அ) காதை ஆ) பருவம்
இ) சருக்கம் ஈ) படலம் [விடை: ஈ) படலம்]

41. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு சித்திரகுப்தன் பதிலைப் போலிருக்கிறது என்று கூறியவர் -------
அ) சாமுவேல் பெப்பிசு ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) உ.வே.சா [விடை: ஆ) பாரதியார்]

42. நோயாளி, மருத்துவர் மருந்தாளுநர் இவ்வரிசையில் விடுபட்டுள்ளது எது?
அ) மருந்து ஆ) யாக்கை
இ) நோய் ஈ) தீர்ப்பான் [விடை: அ) மருந்து]

43. நேரசை என்பது -------
அ) குறில்நெடில், குறில்நெடில் ஒற்று
ஆ) நெடில் குறில், நெடில் குறில் ஒற்று
இ) குறில், குறிலொற்று
ஈ) குறிலிணை, குறிலிணை ஒற்று [விடை: இ) குறில், குறிலொற்று]

44. மேகம் என்னும் பொருள்படும் சொல் -------
அ) செண்டு ஆ) சென்மே
இ) கொண்டு ஈ) கொண்மே [விடை: இ) கொண்டு]

45. இடுவிருந்து என்னும் சொல் தங்கி வரும் இலக்கணம் -------
அ) பண்புத் தொகை ஆ) பண்புப் பெயர்
இ) வினைத்தொகை ஈ) தொழிற்பெயர் [விடை: இ) வினைத்தொகை]

46. அழலேர் செயலை அமுதழை அசைஇயும்-இதில் அசைஇயும் என்னும் சொல்லில் பயின்று வரும் அளபெடை -------
அ) இன்னிசை ஆ) சொல்லிசை
இ) ஒற்றளபெடை ஈ) செய்யுளிசை [விடை: ஆ) சொல்லிசை]

47. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்கள் -------
அ) தொண்டகப்பறை, மூங்கிலரிசி
ஆ) சிலம்பன், துடி
இ) குறிஞ்சி யாழ், தாமரை
ஈ) குறிஞ்சிப்பண், காட்டுக்கோழி [விடை: அ) தொண்டகப்பறை, மூங்கிலரிசி]

48. அகநானூற்றில் முல்லைத்திணைப்பாடல்கள அமைந்துள்ள எண் வரிசை -------
அ) 1, 3, 5, 7 ஆ) 28, 12, 18
இ) 6, 16, 26, 36 ஈ) 4, 14, 24, 34 [விடை: ஈ) 4, 14, 24, 34]

49. உரிச்சொல் பயின்று வராத சொற்றொடர் எது?
அ) உறுபகை ஆ) மாநகர்
இ) கடிநகர் ஈ) செறுபகை [விடை: ஈ) செறுபகை]

50. கற்களைச் செதுக்கும் உளியின் ஓசையும் பெருந்தச்சனின் ஆணைகளும் ஒலிக்கத்தொடங்கி விடும் யார் கூற்று?
அ) நிலா, கதிரிடம் கூறியது
ஆ) கதிர் மற்றும் நிலா, பெரியவரிடம் கூறியது

இ) பெரியவர, கதிர் மற்றும் நிலாவிடம் கூறியது
ஈ) கதிர், நிலாவிடம் கூறியது [விடை: இ) பெரியவர், கதிர் மற்றும் நிலாவிடம் கூறியது]

51. 'ற்' எனும் எழுத்து இடைநிலையாகப் பயின்று வரும் சொல் -------
அ) கற்ற ஆ) பெற்ற
இ) உற்ற ஈ) செற்ற [விடை: அ) கற்ற]

52. "உடன் கூட்டத்து அதிகாரம் செய்கிற கோவிலூர் உடையின் காடன்" இக்கல்வெட்டுச் செய்தியால் அறியப்படும் அதிகாரி -------
அ) ஒலோகமாதேவி ஆ) சோமயன் அமிர்தவல்லி
இ) குந்தவை தேவி ஈ) எருதஞ் குஞ்சரமல்லி [விடை: ஈ) எருதஞ் குஞ்சரமல்லி]

53. கோவில் கருவறையை ------- என்று அழைப்பார்கள்.
அ) தட்சிணமேடு ஆ) விமானம்
இ) அகநாழிகை ஈ) திருவாயில் [விடை: இ) அகநாழிகை]

54. லள வேற்றுமையில் வலிவரின் றடவும் என்ற விதியில் பொருந்தாத சொல் -------
அ) பால்நிலா ஆ) பாற்குடம்
இ) கற்பொடி ஈ) வாட்படை [விடை: அ) பால்நிலா]

55. சோழன் செங்கணான் கட்டிய கோவில்கள் பற்றிய செய்தியில் எதில் இடம்பெற்றுள்ளது -------
அ) பெரிய கோவில் கல்வெட்டு ஆ) திருநாவுக்கரசர் பதிகம்
இ) மண்டகப்பட்டுக் கல்வெட்டு ஈ) பதிற்றுப்பத்து [விடை: ஆ) திருநாவுக்கரசர் பதிகம்]

56. உடம்படுமெய்ப்புணர்ச்சி அமைந்து வரும் சொல் -------
அ) பேரடி ஆ) திருவடி
இ) சீரடி ஈ) குறளடி [விடை: ஆ) திருவடி]

57. 'குற்றாலக் குறவஞ்சி' எவ்வகை இலக்கியம் எனப் போற்றப்படுகிறது?
அ) இசை ஆ) பாமர இலக்கியம்
இ) சமய இலக்கியம் ஈ) நாடகம் [விடை: ஈ) நாடகம்]

58. தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள நந்தி யாருடைய காலத்தது?
அ) நாயக்கர் ஆ) பாண்டியர்
இ) சோழர் ஈ) சேரர் [விடை: அ) நாயக்கர்]

59. "என் தமக்கையின் மடியில் அயர்ந்து போனாய்" - இது யாருடைய கூற்று -------
அ) அணில் ஆ) அரசமரம்
இ) குயில் ஈ) புளியமரம் [விடை: ஈ) புளியமரம்]

60. புல்லாங்குழலை ஆன்மாவாக் குறியீடு செய்து கவிதை படைத்தவர் -------
அ) முகமது இக்பால் ஆ) மௌலானா ரூமி
இ) அப்துல் ரகுமான் ஈ) உமர்கய்யாம் [விடை: ஆ) மௌலானா ரூமி]

61. கைலாசபதி சித்தர்களை ------- என்று அழைக்கின்றார்.
அ) கலகக்காரர்கள் ஆ) கிளர்ச்சியாளர்கள்
இ) நிறைவடைந்தவர்கள் ஈ) இரசவாதிகள் [விடை: ஆ) கிளர்ச்சியாளர்கள்]

62. கண்ணனின் பெருமையை உணர்த்தும் தொடர் எது?
அ) மேருபினிடைத் தவம் மாண்டேன்
ஆ) கைத்தல மலரால் மார்புறத் தழுவி
இ) மல்லர்அம் தொடையில் நிருபன்
ஈ) கைப்புனலுடன் தருக என்ன [விடை: ஆ) கைத்தல மலரால் மார்புறத் தழுவி]

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

63. தொடர் நிலைத் தொடர்களில் ------- குறியீடு இடம்பெற வேண்டும்
அ) முக்காற்புள்ளி (;) ஆ) அரைப்புள்ளி (:)
இ) காற்புள்ளி (,) ஈ) முற்றுப்புள்ளி (.) [விடை: ஆ) அரைப்புள்ளி (:)]

64. 'மரணத்தின் பின் மனிதர் நிலை' என்ற நூலின் ஆசிரியர் -------
அ) மறைமலை அடிகள் ஆ) வள்ளலார்
இ) பாரதியார் ஈ) பரிதிமாற்கலைஞர் [விடை: அ) மறைமலை அடிகள்]

65. பிரமிள் எழுதிய 'நட்சத்திரவாசி' எனனும் நூலின் வடிவம் -------
அ) புதுக்கவிதை ஆ) சிறுகவிதை
இ) நாடகம் ஈ) கட்டுரை [விடை: இ) நாடகம்]

66. கீழுள்ளவற்றுள் புதுமைப்பித்தன் எழுதாத சிறுகதை -------
அ) சாபவிமோசனம் ஆ) கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்
இ) குருபீடம் ஈ) காஞ்சனை [விடை: இ) குருபீடம்]

67. இடைக்குறை விகாரம் உள்ள சொல் -------
அ) நிகர்அலன் ஆ) மாமதலை
இ) செய் புண்ணியம் ஈ) வெவ்வினை [விடை: அ) நிகர்அலன்]

68. கீழ்வருவனவற்றுள் ஒன்று சித்தர்களின் கூற்று -------
அ) ஆன்மாதான் தலைவன் ஆ) ஆன்மாவும் ஞானமும் ஒன்றுதான்
இ) ஞானத்தினால் மட்டுமே முக்தி அடைய முடியும்
ஈ) ஆன்மாவை உள்ளுணர்வினால் அறியலாம்
[விடை: இ) ஞானத்தினால் மட்டுமே முக்தி அடைய முடியும்]

69. வங்க அரசின் 'நேதாஜி இலக்கிய விருது' பெற்றவர் -------
அ) த.நா. குமாரசுவாமி ஆ) இரவீந்தரநாத் தாகூர்
இ) ஜெயகாந்தன் ஈ) பசும்பொன் முத்துராமலிங்கம்
[விடை: அ) த.நா.குமாரசாமி]

70. 'மனிதன் என்றொரு பாடலை இசைப்பேன்' எனப் பாடியவர் -------
அ) ஆத்மாநாம் ஆ) கண்ணதாசன்
இ) அப்துல் ரகுமான் ஈ) இன்குலாப் [விடை: ஈ) இன்குலாப்]

71. பொருளோடு பொருத்துக.

			விடை:
1. எழிலி	-	i. வாய்க்கால்	மேகம்
2. சிறுகால்	-	ii. மேகம்	வாய்க்கால்
3. பரல்	-	iii. உழைப்பு	கல்
4. பாடு	-	iv. கல்	உழைப்பு

72. மெய்ப்புத் திருத்தும் கலையை அறிந்தவர் ------- வேலைவாய்ப்புப் பெறலாம்.
அ) பத்திரிகை அலுவலகத்தில்
ஆ) இம்மூன்றும்
இ) நூல் வெளியிடும் பதிப்பகத்தில்
ஈ) தட்டச்சுச் செய்யுமிடத்தில் [விடை: ஆ) இம்மூன்றும்]

73. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடும் 11 வகையான ஆடற்கலைகளில் முக்கியமானது -------
அ) அல்லியம் ஆ) துடிக்கூத்து
இ) குடக்கூத்து ஈ) வேளிர் ஆடல் [விடை: ஈ) வேளிர் ஆடல்]

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

74. நர்த்தகி நடராஜன் அவர்களின் நடன குரு -------
அ) பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் ஆ) பத்மா சுப்ரமணியம்
இ) தஞ்சை கிட்டப்பா ஈ) வழுவூர் இராமையா [விடை: இ) தஞ்சை கிட்டப்பா]

75. 'பௌ - கதா - கவோ' என்பது -------
அ) காகம் ஆ) மைனா
இ) குயில் ஈ) புறா [விடை: ஈ) புறா]

76. "உழுவோர்கெல்லாம் விழுமிய வெந்துநீ எம்மண்ணயாயினும் நன்மண்ணாக்குவை" இவ்வடியில் குறிப்பிடப்படும் வேந்து யார்?
அ) வேளாண் அலுவலர் ஆ) மண்புழு
இ) அரசன் ஈ) உழவன் [விடை: ஆ) மண்புழு]

77. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) இச்சாமதி ஆ) மயூராஷி
இ) சமேலி ஈ) கபோதாஷி [விடை: இ) சமேலி]

78. எட்டுத்தொகை நூல்களுள் வரலாற்றுத் தகவல்களை மிகுதியாகக் கொண்ட நூல் -------
அ) அகநானூறு ஆ) பதிற்றுப்பத்து
இ) கலித்தொகை ஈ) புறநானூறு [விடை: ஈ) புறநானூறு]

79. சித்தர்களை 'நிறைமொழி மாந்தர்' என்று குறிப்பிடும் நூல் -------
அ) திருமந்திரம் ஆ) திருக்குறள்
இ) கோயில் நான்மணிமாலை ஈ) சிலப்பதிகாரம் [விடை: ஆ) திருக்குறள்]